# தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட்

TACTV

34 (123), 6வது தளம், துகார் டவர்ஸ், மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008

தொலைபேசி எண் 044-28432911, தொலைநகல். 044-28432913


## கேபிள் டிவி சந்தாதாரர்கள் செலுத்தும் மாத சந்தா கட்டணத்திற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் ரசீது குறித்த முக்கிய அறிவிப்பு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் 30.08.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி எண்.110–ன் கீழ் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தரமான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் வழங்கும் எனவும் இதில் ரூ.20/–ஐ கேபிள் ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவித்தார்கள். இது தொடர்பாக அரசாணை எண்.16, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்.1) துறை, நாள்.11.11.2011 வெளியிடப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் 02.09.2011 அன்று சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவியின் சேவை துவக்கி வைக்கப்பட்டது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் 20.10.2012 அன்று சென்னை மாநகர கேபிள் டிவி சேவையும் துவக்கி வைக்கப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அரசாணை எண்.16, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்.1) துறை, நாள்.11.11.2011 மூலம் நிர்ணயிக்கப்பட்ட சந்தாத்தொகையான ரூ.70/– ஐ மட்டும் சந்தாதாரர்களிடமிருந்து உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCOs) பிரதி மாதம் வசூல் செய்வதை உறுதி செய்யும் பொருட்டு 01.02.2014 முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ள அடிக்கட்டையுடன் கூடிய ரசீது புத்தகம் மூலம் மட்டுமே உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCOs) ஒவ்வொரு சந்தாதாரர்களிடமிருந்து மாதாந்திர சந்தா தொகையான ரூ.70/– வசூல் செய்தல் வேண்டும் என 01.02.2014 அன்று இந்நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த செய்திக்குறிப்பினை எதிர்த்து சில கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (W.P.No:4663/2014) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 17.02.2014 அன்று வழங்கியுள்ள இடைக்கால தீர்ப்பில் இந்த வழக்கின் இறுதி தீர்ப்பு வரும் வரையில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ரசீது வழங்கும் பணி தொடரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை எண்.16, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்.1) துறை/11.11.2011 மூலம் நிர்ணயிக்கப்பட்ட சந்தாத்தொகையான மாதம் ரூ.70/– என்ற குறைந்த கட்டணத்தில் தரமான கேபிள் டிவி சேவையினை வழங்கி வரும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ரசீது வழங்கும் முறைக்கு அனைத்து உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO) தங்களது சிறப்பான ஒத்துழைப்பினை நல்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் அனைத்து சந்தாதாரர்களும் தாங்கள் செலுத்தும் மாதசந்தாத் தொகைக்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அச்சிட்டு வழங்கியுள்ள ரசீதினை தங்கள் கேபிள் ஆப்பரேட்டர்களிடம் வலியுறுத்தி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ரசீதின் மாதிரி வடிவம்**

நாள் **LCO** நகல்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**No**

**LCO** எண் ____________________

சந்தாதாரர் பெயர் ____________________

____________________ மாத சந்தா ரூ.70/–

(ரூபாய் எழுபது மட்டும்) பெற்றுக் கொள்ளப்பட்டது.

சந்தாதாரர் **LCO/MSO**

சந்தாதாரர் நகல்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**No** நாள்

**LCO** எண் ____________________

சந்தாதாரர் பெயர் ____________________

____________________ மாத சந்தா தொகை ரூ.70/– (ரூபாய் எழுபது மட்டும்) பெற்றுக் கொள்ளப்பட்டது.

சந்தாதாரர் **LCO/MSO**

**மேலாண்மை இயக்குநர்**

செ.ம.தொ.இ/ /வரைகலை/2014